Bharatiya Vidya Bhavan BULLETIN

VOLUME XXVIII No. 3 COIMBATORE KENDRA APRIL 2019

Dear reader,

As the personality of this month, we are featuring Kamaladevi Chattopadhyay, a brave woman who made a difference in the lives of many of her countrymen. From Coimbatore, we have included a write up on Kovai Kizhar, a multi-faceted personality, whose contribution to the progress of this city has been phenomenal. We are also carrying a report on the magnificent Vinayagar at Puliakulam. And, of course, the usual features are there for you to enjoy.

Wish you happy reading!

The editorial board

## PERSONALITY OF THE MONTH
# KAMALADEVI CHATTOPADHYAY



*(03.04.1903 – 29.10.1988)*

A freedom fighter, actor, social activist, art enthusiast, politician and feminist rolled into one, Kamaladevi Chattopadhyay is most remembered for being the driving force behind the renaissance of Indian handicrafts, hand looms, and theatre in independent India.

Born in a Saraswat Brahmin community of Mangalore, on 3 April 1903 in Mangaluru, Kamaladevi was an exceptional student and also exhibited qualities of determination and courage from an early age. She got married in 1917 at the age of 14, but was widowed two years later. Later, when she was twenty years old, she married Harindranath Chattopadhyay (brother of Sarojini Naidu), much to the opposition of the orthodox society of the times, which was still heavily against widow marriage. Eventually, after many years of marriage, they parted ways amicably.

By 1923, Kamaladevi, enrolled herself as a member of the Congress party. Politics as a career choice for women was largely rare at the time. She was the first to be arrested by the British for selling contraband salt and the first to run for Legislative office.

Even though she was a strong advocate of Salt Satyagraha, she differed with Gandhi's decision to exclude women in the march. Though Kamaladevi was charged with violation of the salt laws and sentenced to a prison term, she captured the nation's attention when, in a scuffle over the Congress flag, she clung to it tenaciously.

She founded the All-India Women's Conference (AIWC) and became its first Organizing Secretary.

Soon after India's independence came the travails of Partition. She plunged into the rehabilitation of the refugees. Her first task was to set up the Indian Cooperative Union to help with rehabilitation, and through the Union she made plans for a township on cooperative lines. After much struggle, the township of Faridabad was set up, on the outskirts of Delhi, rehabilitating over 50,000 refugees from the Northwest Frontier. She worked tirelessly in helping the refugees to establish new homes and new professions; for this, they were trained in new skills. She also helped set up health facilities in the new town.

She set up a series of crafts museums to hold and archive India's indigenous arts and crafts. She promoted arts and crafts, and instituted the National Awards for Master Craftsmen, and set up

> The will to win, the desire to succeed, the urge to reach your full potential... these are the keys that will unlock the door to personal excellence.
> - *Confucius*

Central Cottage Industries Emporia throughout the nation to cater to the tastes of a nation, rising to its ancient glory. She was also instrumental in setting up the All India Handicrafts Board, and, was its first chairperson.

In 1964,Chattopadhyay started the Natya Institute of Kathak and Choreography (NIKC), Bangalore, under the aegis of Bharatiya Natya Sangh, affiliated to the UNESCO. She also set up the National School of Drama and later headed the Sangeet Natak Akademi, and was also a member of UNESCO.

Chattopadhyay was a great author too. She wrote about 20 books, many of which were inspired by her personal experiences during visits to foreign countries.

Kamladevi has acted in Films like Tansen starring K. L. Saigal and Khursheed, followed by Shankar Parvati (1943), and Dhanna Bhagat (1945), starting her film career with the first silent film of Kannada film industry, Mricchakatika (Vasantsena) in 1931.

She was among the chosen few national leaders who had the privilege of signing the new Constitution of India document after Independence.

Kamaladevi Chattopadhyay was conferred with Padma Bhushan and Padma Vibhushan by the Government of India in 1955 and 1987 respectively. She was awarded the Ramon Magsaysay Award in 1966 for Community Leadership. In 1974, she was awarded the Sangeet Natak Akademi Fellowship, Ratna Sadasya, in recognition of her lifetime's work. UNESCO honoured her with an award in 1977 for her contribution towards the promotion of handicrafts. Shantiniketan honoured her with the Desikottama, its highest award.

Kamaladevi was arguably the best travelled Indian woman of her generation, yet, she remained solidly grounded in the ethos of Indian life. The lives of common people were of abiding interest to her.

A rare woman, whose vision gifted India so many of its iconic cultural institutions, Kamaladevi passed away on October 29, 1988, at the age of 85.

*Sources: https://indianexpress.com/article/lifestyle/life-style/a-beautiful-mind-looking-back-at-the-life-of-kamaladevi-chattopadhyay/*

*https://www.indiatoday.in/education-today/gk-current-affairs/story/why-google-remembers-kamaladevi-chattopadhyay-the-unsung-feminist-freedom-fighter-1203511-2018-04-03*

# IN COMMEMORATION OF THE 150TH BIRTH ANNIVERSARY OF MAHATMA GANDHI

## GANDHIJI ON EDUCATION



- An education which does not teach us to discriminate between good and bad, to assimilate the one and eschew the other, is a misnomer.
- Education should be so revolutionized as to answer the wants of the poorest villager, instead of answering those of an imperial exploiter.
- Literacy in itself is no education.
- Real education has to draw out the best from the boys and girls, to be educated.
- True education must correspond to the surrounding circumstances or it is not a healthy growth.
- What is really needed to make democracy function is not knowledge of facts, but right education.
- By education I mean an all-round drawing out of the best in the child and man—body, mind and spirit.
- Experience gained in two schools under my control has taught me that punishment does not purify - if anything, it hardens children.
- The aim of university education should be to turn out true servants of the people who will live and die for the country's freedom.
- Persistent questioning and healthy inquisitiveness are the first requisite for acquiring learning of any kind.
- The canker has so eaten into the society that in many cases, the only meaning of education is a knowledge of English.
- The emphasis laid on the principle of spending every minute of one's life usefully is the best education for citizenship."

*Source: http://www.gandhiashramsevagram.org/on-education/gandhi-views-on-education.php*

It does not matter how slowly you go as long as you do not stop.

*- Confucius*

## MAHATMA GANDHI'S 150th BIRTH ANNIVERSARY

Mahatma Gandhi's 150th birth anniversary was celebrated at N.G.M.College, Pollachi on 27th February, 2019 at Arutchelvar Dr. N. Mahalingam Arangam. Many Gandhians who have been effectively spreading the message of the Mahatma were conferred with 'Mahatma Gandhi Spirit of Service Award'. The function was held in the presence of Dr. B.K.Krishnaraj Vanavarayar, president, N.G.M. College, Pollachi and Thiru. M. Balasubramanium, Secretary, N.G.M.College, Pollachi. Tirupur Krishnan, Editor, Amudha Surabhi, Chennai, delivered special address.




*Standing - The awardees*

*Sitting – (From right to left) Thiru S.Sivakumar (Treasurer – NGM College), Dr.Thiruppur Krishnan (Editor, Amutha Surabi, Chennai), Dr.B.K.Krishnaraj Vanavarayar (President – NGM College), Thiru.M.Balasubramaniam (Secretary – NGM College), Dr.P.M.Palanisamy (Principal – NGM College)*



**ARSHA VIDYA GURUKULAM**

and

**Bharatiya Vidya Bhavan**

COIMBATORE KENDRA



**H. H. SWAMI PARAMARTHANANDA**

**with the divine blessings of**

**Pujya Swami Dayananda Saraswati**

**Talks on Uddhava Gita - Chapter 4**

**28th April - 4th May, 2019**

Evening : 6.30 - 7.45 pm

(from 29th April 2019)

Advaita Makaranta

Morning : 6.30 - 7.30 am

VENUE **Bhavan's Auditorium**

582, D. B. Road, R. S. Puram, Coimbatore

**VELUKKUDI SHRI KRISHNAN - UPANYASAM**

from 23.05.2019 to 27.05.2019

# ACTIVITIES AT RS PURAM SCHOOL

## INTER-HOUSE COMPETITION - PRIMARY CLASSES – 16.02.19



*Colouring*



*Pot decoration*

## BHAVAN'S BALA SABHA 28.02.19




*Bhavan's Bala Sabha on 'Science – a boon or a bane?'*

## HALL TICKET POOJA AND DISTRIBUTION FOR CLASSES XI & XII ON 22.02.19.



*Hall tickets are being distributed to the students with blessings.*

## AN INTERACTIVE SESSION - 21.02.2019



*The session on 'Good touch-bad touch' is going on.*

An interactive session was conducted on 21.02.19 on the topic 'Good Touch and Bad Touch'. Dr.Lavanya and Dr.Lakshmi Shanti gave interesting speeches. They gave instructions as to how to tackle difficult situations. Warning students against accepting gifts from strangers, they said that if something goes wrong, children should shout 'No' and run away from that place immediately. They should confide their experience with trusted persons like parents, teachers, etc. or call the Childline, they said. They also suggested that children should learn self-defence techniques to protect themselves.

It does not matter how slowly you go as long as you do not stop.
- *Confucius*

# A SESSION ON POSITIVE BEHAVIOUR THERAPY - 19.2.2019




*Dr. Hemalatha administers the therapies to students.*

Dr. Hemalatha Natesan, Professor (Retired), Head of the Department, Psychology, Avinashilingam University, Coimbatore conducted a motivational therapy session on 18.02.19 & 19.02.19. The interactive session comprised 'Deep breathing therapy', 'Relaxation therapy', 'Smile therapy' and 'Laughter therapy' and ended with self-hypnosis when students repeated the positive affirmations initiated by her.

# 'SYNERGY' - CELEBRATING SCIENCE AND SPIRITUALITY

A Science exhibition was conducted at R.S.puram in connection with the Science Day on 28.02.19. The auditorium was filled with charts and models exhibited by the students of classes VII, VIII & IX. Students exhibited models such as 'Heart Beat Analyzer', 'Air cooler', 'The Excretory System', 'Biogas plant', 'Science village', 'Water Alarm', 'Hydroponics' and 'Foosball Games'. The primary children exhibited their models and craft work. There was a discussion between two students on installing “love app”. Students actively participated and enthusiastically explained their exhibits to the chief guest and the audience.





*Students explain their exhibits to the visitors*



*Students look at the exhibits with eagerness*

# கோவை மையத்தின் 163வது சிந்தனை அரங்கம்




திருமதி. மீனாட்சி பாரதி அவர்கள் உரையாற்றுகிறார்

கோவை பாரதீய வித்யா பவனம் நடத்தி வரும் சிந்தனை அரங்கத்தின் 163 வது கூட்டம் பவன் வளாகத்தின் கருத்தரங்க அறையில், 28. 02. 2019 அன்று நடைபெற்றது. அவ்வமயம், மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தின் மேனாள்த் தமிழ்த் துறைத்தலைவர், திருமதி. மீனாட்சி பாரதி அவர்கள் மெய் மொழியும், பொய் மொழியும்' என்ற என்ற தலைப்பில் உரையாற்றினார்.

# FELICITATIONS

## PADMASHRI DR. R.V. RAMANI

Chairman Shri.B.K.Krishnaraj Vanavarayar felicitated Dr.R.V.Ramani, Founder and Managing Trustee of Sankara Eye Hospital for being conferred with the prestigious Padmashri award. Shri.K.V.Sonpal & Shri. C.R. Suryanarayanan were also present.



*From L to R : Shri. B.K. Krishnaraj Vanavarayar, Padmashri Dr.R.V.Ramani, Dr. Mrs. Radha Ramani, Shri K.V. Sonpal and Shri. C. R. Suryanarayanan*

## VETERAN TEACHERS



*Smt.K.Meera, Sr.Principal of R.S.Puram and Ajjanur Schools, Smt.G.L.Lalithambal and Smt. S. Meena, of R.S. Puram School (teachers of Physics and Social studies, respectively), were honoured on 29.03.19 for their successful completion of over three decades of tireless and committed service.*

## SHRI.K.V.SONPAL



*Shri.K.V.Sonpal, Registrar, was honoured by Chairman Shri. B.K. Krishnaraj Vanavarayar on 13.03.19 for his successful completion of ten years at the Bhavan.*

# ACTIVITIES AT AJJANUR SCHOOL

## AN AWARENESS PROGRAMME ON HEALTH EDUCATION

An Awareness Programme related to health education was conducted at Ajjanur school in three sessions, at the seminar hall. The first one was for the girls of 8th standard on 07.02.2019. Dr. Apsara from PSG – RHTC, Vedapatti, Coimbatore spoke to the girls of VIII standard on 'Anatomy and Physiology'and gave a few tips about being hygienic during the menstrual cycle. During the second session on 19.02.19, Dr C Karthick Annamalai, MBBS MD, Pediatrician & Neonatologist spoke to the students of Standards 6 and 7 on the topic 'Good touch and Bad Touch'. Dr M Ismail, MBBS, DCH, Pediatrician addressed the students of classes 8 and 9 on the same topic on 20.02.2019.



*Dr. C. Karthick annamalai addresses the students*

> Don't watch the clock; do what it does. Keep going.
>
> - *Sam Levenson*



*Dr. Apsara with the students*



*Dr. M. Ismail addresses the students*

## தாய் நாட்டிற்காக உயிர் நீத்த இந்திய இராணுவ வீரர்களுக்கு வீர அஞ்சலி.

தாய்நாட்டிற்காக உயிர் நீத்த இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 22.02.19 அன்று கோவையிலுள்ள பல்வேறு பள்ளி மாணவர்களின் மனிதச் சங்கிலி அணி வகுப்பு கோவை காந்தி பார்க் முதல் பால்கம்பெனி வரை நடைபெற்றது. இவ்வணி வகுப்பில் கோவை பாரதீய வித்யா பவன் மெட்ரிக் மேனிலைப் பள்ளி மாணவர்களும் கலந்து கொண்டு வீரர்களுக்கு மரியாதை செலுத்தினர்.



மனிதச் சங்கிலியில் பங்கேற்ற ஆர்.எஸ்.புரம் பள்ளி மாணவர்கள்

வீர வணக்கம்.....

உன் காயங்கள் பார்க்கின்றோம்,
உனக்காகக் கண்ணீர் வடிகின்றோம்....

விருட்சம் ஒன்று முளைக்க
விதையாய் விழுந்தனையே,

என் வீரத் திருமகனே!

என் வீர வணக்கம்.....

தனதின்னுயிர் தந்து எங்கள் உயிர் மீட்டாய்!

எல்லையில் நின்று எங்கள் தொல்லைகள் தீர்த்தாய்!

தன் தாயைக் காட்டிலும் தன்

தாய் நாடே பெரிது என்றாய்!

நாங்கள் சுவாசிக்க உன் சுவாசம் தந்தாய்!

தூய திரு ரத்தமே! துடிக்குது உன் தாயுள்ளமே!



மனிதச் சங்கிலியில் பங்கேற்ற அஜ்ஜனூர் பள்ளி மாணவர்கள்

**செ. தமிழ்ச்செல்வன்,**
முதுகலைத் தமிழாசிரியர்,
பாரதீய வித்யா பவன் மேனிலைப் பள்ளி,
ஆர்.எஸ்.புரம், கோவை

You can't cross the sea merely by standing and staring at the water.
*- Rabindranath Tagore*

## THE TRITIYA SOPAN CAMP

The three-day Tritiya Sopan Camp was conducted between 22-02-2019 and 24.02.2019. On the first day, the birthday of Baden Powel (founder of Scoutes movement) was celebrated. On the second day, Coimbatore district's CEO Mr. Ayyannan came and inaugurated the Camp. After his inaugural address, Camp Officer Mrs. Dhiraviyakani (Coonoor District Training Commissioner) took class about making different kinds of knots, measurement of the height of a river etc. On the third day, there was 'All faith prayer' at 7:30 am. The Camp came to an end at 1:30 pm after lunch.



*Students at the Tritiya Sopana Camp.*

## NATIONAL SCIENCE DAY CELEBRATION



*Chairman and Joint secretary, along with the principal, visit the science exhibition.*




*Chief guest is addressing the gathering*

Chairman Shri. BK Krishnaraj Vanavarayar presided over the celebration of National Science Day at Ajjanur School on 28.02.2019 and motivated the students. Students gave speeches in English and Tamil on the importance of National Science Day. There was also a cultural programme by the KG and primary students. Chief guest Dr.S.Manivannan, spoke on saving and conserving water for future generation and the need for rain harvesting. Later, he inaugurated the science exhibition put up by the students of classes 1 to 9 at the Primary block and Vivekananadar Arangam. Students of Class IX made a power point presentation on Nanotechnology and pace debris. Joint Secretary Shri. Surya Narayanan attended the function and encouraged the students.

## INTERNATIONAL WOMEN'S DAY



*Teachers celebrate International Women's Day.*

## வசந்தத்தை வரவேற்கும் வண்ண வண்ண மலர்கள்



கொத்துக் கொத்தாக பூத்துக் குலுங்கும் சரக்கொன்றை
(இடம் : அஜ்ஜனூர் பள்ளி)

# சி.எம்.இராமச்சந்திரன்செட்டியார் (கோவைக்கிழார்)



(நவம்பர் 30, 1888 – டிசம்பர் 3, 1969)

1888 நவம்பர் 30ம் நாள், மருதாசலம் – அங்கம்மாள் தம்பதியர் கோவைக்கு கொடுத்த கொடைதான் திரு.இராமச்சந்திரன் செட்டியார் என்கிற கோவைக்கிழார். செல்வச் செழிப்பு மிக்க, கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த குடும்பத்தில் பிறந்ததால், அக்காலத்திலேயே பி.ஏ. முடித்து சட்டக்கல்வியும் பயின்று வழக்குரைஞர் ஆனார். கோவைக்கிழார் தமிழ் இலக்கண, இலக்கியங்களைத், திரு. திருச்சிற்றம்பலம் பிள்ளை, திரு. சபாபதிப் பிள்ளை, திரு. உ.வே.சாமிநாதய்யர் போன்றோரிடம் கற்றுக்கொண்டார்.

கோவைக்கிழார் கோவையில் வழக்குரைஞராய்ப் பல்லாண்டுகள் பணிபுரிந்தார். அத்தொழிலில் அவர் மனம் ஈடுபடவில்லை. தமிழ்த் தொண்டிலும் சமயத் தொண்டிலும் ஆர்வத்தோடு ஈடுபாடு கொண்டார். சென்னையில் படிக்கும் காலத்திலேயே சமுதாயப் பணியிலும் ஈடுபட்டார். தாம் வழக்குரைஞர் தொழிலுக்குச் சென்றபிறகு, தம் குலத்துச் சிறுவர்களுக்குப் பணிபுரிய விரும்பி, “தேவாங்கர் சிறுவர் சபை” என்ற ஓர் அமைப்பை நிறுவி, அதன் செயலராக இருந்து பணிபுரிந்தார்.

கோவைக் கிழார், 1918ஆம் ஆண்டில் கோவை நகராட்சியின் துணைத் தலைவரானார். 1943, 1946 ஆகிய ஆண்டுகளில் பட்டதாரித் தொகுதியில் நின்று சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினராக வெற்றி பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ் வளர்ச்சி ஆலோசகராக இருந்தார்.

கோவையில் தேவாங்கர் உயர்நிலைப் பள்ளியைத் தோற்றுவித்தார். அதன் ஆட்சிக்குக்குழு உறுப்பினராய் இருந்தார். கோவைத் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கி, சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார் தலைமையில் செயலாளராகப் பணிபுரிந்தார். சென்னை சுவடிச்சாலை, தஞ்சை சரஸ்வதி மகால் புத்தகசாலை ஆகியவற்றிலும் இவர் உறுப்பினராய் இருந்தார். கோவை – அரசுக் கல்லூரி பழைய மாணவர் கழகத்திலும், கோவை – காஸ்மோபாலிடன் கிளப்பிலும் (இறுதிக்காலம் வரை) தலைவராய் இருந்தார். நெசவுத்தொழிலை வளமுடையதாக்கப் பல கைத்தறிக் கூட்டுறவு சங்கங்களை உருவாக்கினார். இவர் இடம்பெறாத கல்விக் கழகங்களோ, பொதுப்பணி மன்றங்களோ, சமயச் சபைகளோ, பொழுதுபோக்கு அமைப்புகளோ, பொது மாநாடுகளோ இல்லை என்றே கூற வேண்டும்.

கோவைக்கிழார், சென்னை – இராஜதானியின் அறநிலையத்துறை ஆணையாளராக இருந்தபோது, கோயில்களின் வருவாயில் ஒரு பகுதியை, சமய வளர்ச்சிக்கென ஒதுக்க வேண்டும் என்றும், அதன் மூலம் சமயச் சொற்பொழிவுகள், நூல்கள் வெளியிடுதல், நூல் நிலையங்கள் அமைத்தல், ஆகியவற்றுக்காகத் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தினார். கோயில்களில் திருமுறைகள் ஓதுதல், திருமுறைப் பதிகங்களைக் கல்லில் பதித்தல், தல வரலாறுகள் எழுதுதல், கோயில் குடமுழுக்குகளை ஆகம முறைப்படி செய்தல் ஆகியவற்றுக்காக அயராது உழைத்தார். தவத்திரு குன்றக்குடி அடிகளாருடன் சேர்ந்து தமிழ் நாடெங்கும் உள்ள கோயில்களில் தமிழில் அர்ச்சனை நடைபெறப் பாடுபட்டார்.

சமய ஆதீனங்களான தருமபுரம், திருப்பனந்தாள், திருவாவடுதுறை, மயிலம் முதலியவற்றில் தமிழ்க் கல்லூரிகள் தோன்றக் காரணமாக இருந்தார். கொங்குநாட்டுப் பேரூர் சாந்தலிங்கர் திருமடத்தின் சார்பிலும் தமிழ்க்கல்லூரி ஒன்றைத் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாருடன் சேர்ந்து தோற்றுவித்து, அக்கல்லூரியின் முதல்வராகவும் பணியாற்றினார். திருமடத்தின் சார்பில் உயர்நிலைப் பள்ளி தோன்றவும் காரணமாக இருந்தார்.

கோவைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக கோவைக்கிழார் இருந்தபோது, “கொங்குமலர்” என்னும் திங்கள் இதழை நடத்தினார். சைவசித்தாந்த சமாஜத்தின் இதழான, சித்தாந்தம் இதழுக்கும் ஆசிரியராக இருந்து அரும் பணியாற்றினார்.

கோவையின் விரிவான வரலாற்றை முதன் முதலில் எழுதியவர் கோவைக்கிழார் தான். விரிவானதொரு கொங்கு நாட்டு வரலாற்றை, இலக்கியம் மற்றும் கல்வெட்டு ஆதாரங்களோடு நிறுவியவரும் இவரே. இம்மண் பலராலும் ஆளப்பட்டிருக்கிறது; அவர்களைப் பற்றிய தகவல்களையும் அதற்கான ஆதாரங்களையும் தேடி, கோவை வரலாறு எழுதுவது மிகவும் கடினமான பணியாகும். பல்கலைக் கழகங்களும் பல அறிஞர்களும் கூடி செய்ய வேண்டிய பணியைத் தனியொரு ஆளாக நின்று செய்து முடித்தவர் இவர்.

கோவைக் கிழார் ஏறக்குறைய எண்பது நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். இன்னும் அச்சில் ஏறாத நூல்களும் பல உள்ளன.

கோவைக்கிழாரின் பணியைப் பாராட்டி ஆங்கில அரசு, 1930இல் “இராவ்சாகிப்” என்ற பட்டத்தையும், 1938இல் “இராவ்பகதூர்” என்ற பட்டத்தையும் அளித்துச் சிறப்பித்தது. சென்னை மாநிலத் தமிழ்ச்சங்கம், “செந்தமிழ்ப்புரவலர்” என்ற பட்டத்தையும், சென்னை மாநிலச் தமிழ்ச்சங்கம், “சிந்தாந்தப்புலவர்” என்ற பட்டத்தையும், மதுரை ஆதீனம் ‘‘சைவஞாயிறு’’ என்ற பட்டத்தையும் வழங்கிப் பாராட்டியது. “கொங்குநாட்டு வரலாறு” என்ற நூலுக்குத் தமிழ் வளர்ச்சிக்கழகம் பரிசளித்துப் போற்றியது. கோவை நன்னெறிக்கழகம் பொற்பதக்கம் வழங்கிப் போற்றியது.

தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், இந்தி, உருது, மலையாளம் என எட்டு மொழிகளில் சிறந்த புலமை பெற்றிருந்த இச்சான்றோர், 1969ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் தேதி இயற்கை எய்தினார். இவரின் சமாதி பேரூர் தமிழ்க்கல்லூரித் தோப்பில் அமைந்துள்ளது.

*Sources:http://www.nammacoimbatore.in/article_view.php?newsId=4445*
*http://nammacoimbatore.in/article_view.php?newsId=2549*

# அவ்வையின் தமிழ்த்தேன்

சோழ மன்னர் ஒருவர், காவிரிக்கரையில் உலா போய்க் கொண்டிருந்தார். அப்போது, காவிரிக்கரை ஓரமாக ஊர்ந்து வந்த, சங்கு ஒன்று, வாயை திறந்தபடி ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது. அருகில் இருந்த மரத்திலிருந்த மலர்களில் இருந்து, தேன் துளி ஒன்று, சங்கின் திறந்திருந்த வாயில் விழுந்தது.

அதைப் பார்த்த மன்னருக்கு, மெய் சிலிர்த்தது.

"சங்கு கூட பசித்திருக்கக் கூடாது என்று, தன் இடம் தேடி வந்த சங்கிற்கு, இம்மலர்கள், தேனை அளிக்கின்றனவே...' என்று வியந்தபடியே, அரண்மனை திரும்பினார், மன்னர்.

மறுநாள், அரசவை கூடியது. நேற்று கண்ட, சங்கு – தேன் பற்றிய நினைவிலேயே இருந்தது, மன்னர் மனது.

அந்த நேரத்தில், பல நாட்களாக நெடுந்தொலைவு நடந்து வந்த அவ்வை, மிகுந்த சோர்வுடன் சபையில் நுழைந்தார். வந்தவரை, "வாருங்கள்... அமருங்கள்...' என்று வாய் வார்த்தையாகச் சொன்ன மன்னர், அவ்வைக்கு, ஆசனம் அளிக்க, எந்த முயற்சியும் செய்யவில்லை.

அதனால் மனம் நொந்த அவ்வையார் தன் மனதில் இருந்ததையும், மன்னர் மனதில் இருந்ததையும், அப்படியே பாடலாகப் பாடி விட்டார்.

கால் நொந்தேன், நொந்தேன் கடுகி வழி நடந்தே;<br>
யான் வந்த துரம் எளிதன்று – கூனல்;<br>
கருந்தேனுக்கு அங்காந்த காவிரி சூழ் நாடா!<br>
இருந்தேனுக்கு எங்கே இடம்–

இந்தப் பாட்டைக் கேட்டதும், 'நேற்று நாம் கண்டதை, அப்படியே சொல்லி விட்டாரே! தெய்வ சக்தி நிறைந்தவர் இவர்!' என, வியந்தார், மன்னர்; வியக்க வைத்தவர், அவ்வை என்று அறிந்ததும், அவரின் வியப்பு அதிகமானது.

ஆம்! அதுவரை, அவ்வையைப் பற்றி அறிந்திருந்தாரே தவிர, அவரைப் பார்த்தது இல்லை, மன்னர்.

அதன்பின், அவையினரிடம், தான் நேற்று கண்ட காட்சியைப்பற்றிக் கூறி, அவ்வை, அதை அப்படியே விவரித்து, பாடலாகப் பாடியதைச் சொல்லி, மகிழ்ந்தார்.

அவ்வையை மனமாரப் புகழ்ந்தனர், அவையோர்.

சங்கிற்கு, மரத்திலிருந்த மலர்கள், தேன் தந்த நிகழ்ச்சியல்லவா, மன்னர் மனதில் இருந்தது. அதை உணர்த்தும் முகமாக, தான் பாடிய பாடலில், 'தேன்' என்ற சொல்லை பலமுறை பாடிய, அவ்வையின் தமிழாழம் அளவு கடந்தது. அதுமட்டுமல்ல, ''தண்ணீரில் அங்கும் இங்குமாக உலாவும் சங்கு, கரையோரமாக ஒரு மரத்து அடியில் வந்தவுடன், 'என் இருப்பிடம் தேடி வந்த சங்கை, உபசரிப்பது என் கடமை...' என்று, மரம், தன் மலர்கள் மூலம் தேன் தந்து உபசரித்தது. 'அதைப் பார்த்தவன் நீ! உன் நாட்டில், ஓரறிவு உள்ள மரங்கள் கூட, இருப்பிடம் தேடி வந்தவர்க்கு இனிமையான உபசரிப்பை அளித்திருக்கின்றன. ஆறறிவுள்ள நீ, அதைப் பார்த்தும், அரசனாக இருந்தும், உன் சபை தேடி வந்த எனக்கு, அமர எங்கே இடம் – என்றல்லவா கேட்கும்படி ஆகி விட்டது–' என்பது, நுண்பொருள்.

*Source: https://groups.google.com/forum/#!msg/amrithavahini/gVBcNhqY6Eo/iqmkJ7iNCQAJ https://groups.google.com/forum/*

# 'சூரியனுக்கு யாராவது உரிமை கொண்டாட முடியுமா?'

போலியோ இல்லாத – புது உலகம் படைப்போம் என்று அறைகூவல் விடுத்து, தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம்களின் மூலம் போலியோ நோயில் இருந்து சிறு பிள்ளைகளைக் காப்பாற்றி, வெற்றி பெற்ற நாடுகளின் முதல்தரப் பட்டியலில் தற்போது இந்தியாவும் இடம்பெற்றுள்ளது.

இதற்குக் காரணமானவர் யார் தெரியுமா– அவர் தான் டாக்டர் ஜோனாஸ் எட்வர்ட் ஸல்க், (Dr. Jonas Salk). போலியோ'க்கு தடுப்பு மருந்து கண்டுபிடித்தவர். அமெரிக்காவின் நியூ யார்க் நகரில் 28-10-1914 அன்று பிறந்த ஜோனாஸ் எட்வர்ட் ஸல்க், (Dr. Jonas Salk) நியூ யார்க் மருத்துவ பல்கலைக்கழகத்தில் படித்து, பட்டம் பெற்று, சிலவகை மருத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார். இரண்டாம் உலகப் போருக்கு பிந்தைய காலகட்டமான 1950–களில் உலகம் முழுவதும் போலியோ எனப்படும் இளம்பிள்ளை வாதம் நோயின் தாக்கமும், அதனால் விளைந்த பாதிப்புகளும் உச்சகட்டத்தை எட்டியது.

குறிப்பாக, 1952–ம் ஆண்டில் அமெரிக்காவில் மட்டும் சுமார் 58 ஆயிரம் மக்கள் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 3 ஆயிரத்து 145 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 21 ஆயிரத்து 269 பேர் கை, கால்கள் செயலிழந்த நிலையில் முடக்குவாத தாக்கத்திற்கு ஆளாகி, மாற்றுத் திறனாளிகளாக மாறிப் போயினர்.

இந்த அவலநிலையைக் கண்டு கொதித்துப் போன டாக்டர் ஜோனாஸ் ஸல்க், போலியோவுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் மாற்று மருந்தைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் இரவும், பகலும் மூழ்கிப் போனார். 10 ஆண்டுகால கடும் உழைப்பின் பலனாக, 1955–ம் ஆண்டு புதிய மாற்று மருந்து ஒன்றினை வெற்றிகரமாகக் கண்டுபிடித்தார்.

இந்த மருந்தின் செயலாற்றலின் விளைவாகத்தான், இன்றைய உலகில் போலியோ இல்லாத இளைய சமுதாயத்தை பார்க்க முடிகிறது. இந்த அரிய கண்டுபிடிப்புக்கான காப்புரிமை (பேட்டண்ட் ரைட்ஸ்) தனக்குத் தேவை இல்லை என்று கூறிவிட்ட டாக்டர் ஜோனாஸ் ஸல்க், அதனை மனித சமுதாயத்துக்குப் பரிசாக வழங்குவதாகவும் மகிழ்ச்சியுடன் அறிவித்தார்.

பேட்டி ஒன்றில் 'ஏன் நீங்கள் உரிமம் பெறவில்லை–' எனக்கேட்டதற்கு, 'சூரியனுக்கு யாராவது உரிமை கொண்டாட முடியுமா–' என்று கேட்டாராம், இந்த மாமனிதர்!

*Source: https://www.maalaimalar.com/News/World/2017/04/02100124/1077542/man-who-invented-Polio-vaccine-Jonas-Salk-forgotten.vpf*

# கோவை புலியகுளம் விநாயகர் கோவில்



கோவை, புலியகுளம் பகுதியில் அமைந்து உள்ளது முந்தி விநாயகர் கோயில். இங்கே, அருள்பாலிக்கும் விநாயகப் பெருமான், ஆசியாவிலேயே மிகப்பெரிய விக்கிரகத் திருமேனியர் எனப் போற்றுகின்றனர், பக்தர்கள். 21 சிற்பக் கலைஞர்களின் 6 ஆண்டு உழைப்பின் பலன்-- ஓர் அழகிய முந்தி விநாயகர். இவ்வளவு பெரிய சிலையைச் செய்யத் தேவையான பெரிய கல்லைத் தேர்வு செய்வது என்பது எளிதான காரியம் அன்று. பல இடங்களில் தேடி அலைந்து முடிவில் திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி எனும் ஊரில் 20 அடி ஆழத்தில் இருந்து எந்த பின்னமும் இல்லாத ஒரு பாறையைத் தேர்வு செய்து வெட்டி எடுத்தனர். பின் அங்கேயே வைத்து விநாயகப் பெருமான் உருவில் செதுக்கி எடுத்தனர்.

முந்தி விநாயகர் சுமார் 19 அடி 10 அங்குல உயரமும் 11 அடி 10 அங்குல அகலமும் 8 அடி கனமும் கொண்டவராக, சுமார் 190டன் எடை (1,90,000 கிலோ) – கொண்டவராகத் திகழ்கிறார். இச்சிலையை, இதற்கெனத் தயார் செய்யப்பட்ட தனி ஊர்தியில் ஏற்றி கோவிலின் இருப்பிடத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தனர். பிரத்தியேகமாக ஒரு சாய்வு தளம் அமைத்து, நிலைக்குக் கொண்டுவர மட்டும் 18 நாட்கள் பிடித்தன.

எந்த ஒரு இயந்திரத்தின் துணையும் இல்லாமல் இரும்புச் சங்கிலி மற்றும் உருளைகளின் உதவியால் முழுதும், மனித சக்தியாலேயே, இச்சிலையை நிலைக்குக் கொண்டு வந்து ஸ்தாபித்தனர். இந்த விக்கிரகம், அந்தப் பகுதி மக்களால், கடந்த 98-ம் வருடம், ஜகத்குரு ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் தலைமையில் பிரதிஷ்டை செய்யப்பட்டு, இந்தக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

விநாயகரின் நெற்றி மட்டுமே இரண்டடி அகலம். துதிக்கை வலம் சுழிந்து காட்சி தருகிறார், பிள்ளையார். நான்கு திருக்கரங்கள். வலது முன் கரத்தில் தந்தமும் பின் கரத்தில் அங்குசமும்; இடது முன் கரத்தில் பலாப்பழமும் பின் கரத்தில் பாசக் கயிறும் கொண்டு காட்சி தருகிறார். தவிர, துதிக்கையில் மகாலட்சுமியின் அம்சமான அமிர்த கலசத்தைத் தாங்கியபடி, தாமரை பீடத்தில் அமர்ந்து அருள்பாலிக்கிறார், விநாயகக் கடவுள். தாமரை மேல்நோக்கி விரிந்திருப்பது போன்ற வேலைப்பாடு மிக அழகு.

வாசுகிப் பாம்பைத், தன் வயிற்றில் கட்டிக் கொண்டிருப்பதால், நாக தோஷத்தை நீக்கி அருள்கிறார், கணபதிப்பெருமான். அரசமரத்தடியில் கிழக்கு நோக்கி அமர்ந்து அருள்பாலிப்பதால், அருள் கடாக்ஷம் அதிகம். இடது திருவடியில் சித்த லட்சுமியின் அம்சமான பத்ம சக்கரத்தைக் கொண்டுள்ளதால் நாடிவரும் பக்தர்களுக்கு செல்வத்தை வாரி வழங்கி வருகிறார்.

முக்கிய திருவிழாக்கள் : சித்திரை முதல் நாள், தைமுதல் நாள், ஆடி வெள்ளிக்கிழமைகள், விநாயகர் சதுர்த்தி, சுக்ல சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி ஆகிய தினங்களில் சிறப்பு அலங்காரத்துடன் அபிஷேக பூஜைகள் நடந்து வருகின்றன. அத்தினங்களில் அரிசிமாவு, திருமஞ்சனம், மஞ்சள், பஞ்சாமிர்தம், நெய், தேன், பால், தயிர், இளநீர், சந்தனம், பன்னீர் ஆகிய 11 திரவியங்களால் மகா அபிஷேகம் செய்யப்படுகிறது. சித்திரைக்கனியன்று (தமிழ்ப் புத்தாண்டு 5டன் அளவு எடை உள்ள காய், கனிகளால் செய்யப்படுகின்ற அலங்காரம் மிகவும் சிறப்புக்குரியதாகும். அந்த மாதம் முழுவதும் சிறப்பு அலங்காரம் செய்து பூஜைமுடிந்து அலங்காரம் கலைத்த பின்பு பயன்படுத்திய காய் கனிகளை பக்தர்களுக்கு விநியோகிப்பதும் சிறப்புற நடைபெறும். அதேபோல், விநாயக சதுர்த்தி நாளில், அதிகாலையிலேயே விநாயகருக்கு சிறப்பு அபிஷேகங்கள் செய்யப்படுவதுடன், மூன்று டன் எடை கொண்ட பல மலர்களால் ஆன மாலை அணிவிக்கப்பட்டு, ராஜ அலங்காரத்தில் காட்சி தருவார், முந்தி விநாயகர். விழா நாட்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள், பிள்ளையாரைத் தரிசித்துச் செல்வார்கள். நவராத்திரி விழாவும் இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

சரஸ்வதி பூஜை அன்று குழந்தைகளுக்கு நாக்கில் பிரணவ வடிவாகிய விநாயகரின் மூல மந்திரத்தை எழுதி கல்விப் பயணத்தைத் தொடங்கி வைக்கின்றனர். ராகு, கேது தோஷங்கள், நவகிரஹ தோஷங்கள் நிவர்த்திக்காக, நவகோள்கள் கோவில் கொண்ட ஸ்தலங்களுக்குச் சென்று வழிபடுவதை விட, கணங்களுக்கு எல்லாம் நாயகனாகத் திகழும் இம் முந்தி விநாயகனைத் தொழுது போற்றினால் எல்லா தோஷங்களும் நிவர்த்தி ஆகின்றன என முழுமையாக நம்புகின்றனர் பக்தர்கள். சக்தி வாய்ந்த விநாயகர் தன்னை நாடிவந்த பக்தர்களின் தடைபெற்ற திருமணம், குழந்தை பாக்கியம், குடும்ப நலம் போன்ற வேண்டுதல்களை நிறைவேற்றி வைக்கிறார். இதன் காரணமாக பக்தர்களின் வருகை நாளுக்கு நாள் கூடி வருவதைக் காண முடிகிறது. முந்தி விநாயகரை வணங்கினால், அனுாட ஐஸ்வர்யங்களும் பெருகும். பதினாறு வகைப் பேறுகளும் பெற்று, பெருவாழ்வு வாழலாம் என்கின்றனர் பக்தர்கள்.

*Source: <https://www.chennaitodaynews.com/munthi-vinayagar-thirukovil/>*

ஐந்து கரத்தனை யானை முகத்தனை, இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப் புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே
– திருமூலர்

## HAPPINESS IS A DECISION.



A beautiful woman in an expensive dress came to her psychiatrist saying that she was depressed and her life was meaningless.

The psychiatrist called the old lady who cleaned the office floors and then said to the rich lady, “I'm going to ask Mary here to tell you how she found happiness. All I want you to do is listen to her. " So the old lady put her broom, sat on a chair and told her story.

“My husband died of cancer. Three months later, my only son was killed by a car. I had nobody. I had nothing left. I couldn't sleep, I couldn't eat. I never smiled at anyone. I even thought of taking my own life.

Then one evening, a little kitten followed me home from work. Somehow I felt sorry for that kitten. It was cold outside, so I decided to let the kitten in. I got it some milk, and the kitten licked the plate clean.

Then it rubbed against my leg and, for the first time in months, I smiled.

Then I stopped, to think: if helping a little kitten could make me smile, may be, doing something for people could make me happy.

So the next day I baked some biscuits and took them to a neighbour who was sick in bed. Every day I tried to do something nice for someone. It made me so happy to see them happy. Today I don't know of anybody, who sleeps better than I do. I have found happiness by giving it to others.”

When she heard that, the rich lady cried. She had everything money could buy, but she had lost the things money cannot buy.

The beauty of life does not depend on how happy you are, but on how happy others can be, because of you. Happiness is not a destination. It's a journey. Happiness is not tomorrow, it is now. Happiness is not a dependency, it is a decision. Happiness is who you are, not what you have.

*Source: https://www.kindspring.org/story/view.php?op=sg&sid=157911*

## ஞாயிறு

மகாகவி பாரதியாரை மிகச்சிறந்த கவிஞர் என்று மட்டுமே பெரும்பாலோர் அறிவார்கள்.அவருடைய வசன கவிதைகள் மிகவும் ஆழமான கருத்துடையவை.வேதங்களின் உட்பொருளை அடக்கியவை. அவற்றிலிருந்து ஒரே ஒரு மாதிரி, உங்களுக்காக!

ஒளி தருவது யாது– தீராத இளமையுடையது யாது–
வெய்யவன் யாவன்– இன்பம் எவனுடையது–
மழை எவன் தருகின்றான்– கண் எவனுடையது–
உயிர் எவன் தருகின்றான்–
புகழ் எவன் தருகின்றான்– புகழ் எவனுக் குரியது–
அறிவு எதுபோல் சுடரும்–
அறிவுத் தெய்வத்தின் கோயில் எது–
ஞாயிறு,

அது நன்று.

ஞாயிறே, இருளை என்ன செய்து விட்டாய்–
ஓட்டினாயா– கொன்றாயா– விழுங்கி விட்டாயா–
கட்டி முத்தமிட்டு நின் கதிர்களாகிய கைகளால்
மறைத்து விட்டாயா–
இருள் நினக்குப் பகையா–
இருள் நின் உணவுப் பொருளா–
அது நின் காதலியா–
இரவெல்லாம் நின்னைக் காணாத
மயக்கத்தால் இருண்டிருந்ததா–
நின்னைக் கண்டவுடன் நின்னொளி தானுங்கொண்டு
நின்னைக் கலந்து விட்டதா–
நீங்கள் இருவரும் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகளா–
முன்னும் பின்னுமாக வந்து உலகத்தைக் காக்கும்படி
உங்கள் தாய் ஏவி யிருக்கிறாளா–
உங்களுக்கு மரண மில்லையா– நீங்கள் அமுதமா–
ஞாயிறே, உன்னைப் புகழ்கின்றேன்.

– மகாகவி பாரதியாரின் வசன கவிதையிலிருந்து!

Book-Post

To

We welcome suggestions and contributions from the readers for improving the quality and content of the bulletin.